DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.23/20

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name பாரதி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கொடுவிலார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது ஒய்வு பெற்றுவிட்டேன். எதிரிகளை எனக்கு தெரியும். கொடுவிலார்பட்டியில் 1925 ல் எனது முன்னோர்களால் சர்வேஎண். 283/141 என்ற இடம் கிரயம் பெறப்பட்டு அனுபவித்து வரப்பெற்றது. சுமார் 100 ஆண்டுகளாக அனுபவித்து வந்தார்கள். மேற்படி இடம் ஊருக்கு வடக்கே கைஸ்கூல் அருகே அமைந்துள்ளது. மாரிச்சாமி அவரின் மகனுக்கு ஒரு பகுதியை கொடுக்கிறார். அடுத்த பகுதியை 2007 ல் எனக்கும் என் அண்ணன் மகனுக்கும் கொடுத்தார். 2009 ல் எதிரிகள் வந்து அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிசெய்தார்கள். சுப்பன், மாரிச்சாமி, மணிகண்டன், பாலமுருகன், கதிரி, பாண்டியன், உட்பட 8 பேர்கள் 21.3.10 ம் தேதி இரவு 12 மணிக்கு ஆக்கிரமிப்பு செய்ய வந்தார்கள். அதனை தடுத்து நான் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. சம்பவத்திற்கு பின்பு எனக்கு 2,3 முறை அறுவைசிகிச்சை நடைபெற்றதால் எனக்கு ஞபாக சக்தி குறைந்துவிட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் மீது எந்த தேதியில் எஸ்பியிடம் புகார் கொடுத்தேன் என்றால் 2.2.10 ல் கொடுத்தேன். சாட்சி மீண்டும் ஞாபகசக்தி இல்லை என்று சொல்கிறார். நான் புகார் கொடுத்த தேதியை தவறாக சொல்கிறேன் என்றால் எனக்கு ஞாபக சக்தி இல்லை. 1925 லிருந்து தாவா இடத்தை அனுபவித்து வருவதற்காக சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்களின் நகல்களை தான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவ தேதி பற்றி எனக்கு ஞபாகம் இல்லை. நடந்த சம்பவம் பொய் என்றாலும் நான் புகார் நேரடியாக கொடுக்காமல் வேறு நபர் மூலமாக கொடுத்தேன் என்றாலும் நடந்த சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் சரியல்ல. எனக்கு ஞபாகம் இல்லாமல் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.